# மெட்ரோ ரயில்களில் அரசு ஊழியர்கள் கொரோனா விழிப்புணர்வு பிரசாரம்

சென்னை, மார்ச் 22-

மெட்ரோ நிலையங்களில், ரயில்களில் அரசு ஊழியர்கள் கொரோனா விழிப்புணர்வு பிரசாரம் செய்தனர்.

சென்னை, விமான நிலையம் – வண்ணாரப்பேட்டை, பரங்கிமலை – சென்ட்ரல் இடையே மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது.

இந்த ரயில்களில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க மெட்ரோ நிர்வாகத்தின் சார்பில், பல்வேறு பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.

இத்துடன், அரசு சுகாதார துறையுன் இணைந்து, விமான நிலையம், திருமங்கலம், ஆலந்தூர், வடபழனி, கோயம்பேடு, எழும்பூர் மற்றும் சென்ட்ரல் மெட்ரோ நிலையங்களிலும், ரயில்களிலும் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.



■ சென்னை, சென்ட்ரல் மெட்ரோ நிலையத்தில், அரசு சுகாதார துறையினரின் சார்பில், கொரோனா விழிப்புணர்வு ஆலோசனை வழங்கப்படுகிறது.

நிலையங்களிலும், ரயில்களிலும் கிருமி நாசினி தெளிக்கப்பட்டது.

அரசு சுகாதார துறை ஊழியர்கள் மெட்ரோ ரயில்களில், பயணியருக்கு, 5,500 பயணியருக்கு கையுறையும், கொரோனா வைரஸ் தடுப்பு விழிப்புணர்வு பிரசார துண்டு பிரசுரங்களும் வழங்கப்பட்டது. சுகாதார பாதுகாப்பு ஆலோசனையும் வழங்கப்பட்டது.

விமான நிலைய மெட்ரோ நிலையத்தில், பயணியர் காய்ச்சல் அளவை கண்டறியும், தெர்மல் ஸ்கேனர் கருவியால் சோதனை நடத்தப்பட்டது.